**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம் மாநகராட்சி மேயர்கள் மற்றும் துணை மேயர்களுக்கு பதவிக் காலத்தில் மாநகராட்சியிலிருந்து அளிக்கப்படும் வசதிகள் மற்றும் நடைமுறைகள் குறித்து ஆணைகள் வெளியிடப்படுகிறது

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை**

அரசு ஆணை (நிலை) எண் 262 நாள் 14.10.96

பார்வை

1. திருநெல்வேலி மாநகராட்சி ஆணையரின் கடித எண் 10615/96/சி1 நாள் 7.9.96

2. மதுரை மாநகராட்சி ஆணையரின் கடித எண் சிடபிள்யு 8 /59656/96

   நாள் 11.9.96

3. சென்னை மாநகராட்சி ஆணையரின் கடித எண்,பிசி எண் 109/96

   நாள் 13.9.96

ஆணை

மாநகராட்சி மேயர்கள் மற்றும் துணை மேயர்களுக்கு பதவிக் காலத்தில் அளிக்கப்பட வேண்டிய வசதிகள் மற்றும் நடைமுறைகள் குறித்து பார்வையில் கண்டுள்ள கடிதங்களில் திருநெல்வேலி, மதுரை மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர்கள் அரசின் தெளிவுரையை கேட்டுள்ளார்கள். இது குறித்து அரசு விரிவாக ஆராய்ந்து சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம் மாநகராட்சி மேயர்கள் மற்றும் துணை மேயர்கள்

பதவிக் காலத்தில் கீழ்க்கண்டவாறு வசதிகள் பெறவும் மற்றும் இது சம்பந்தமான நடைமுறைகள் / தெளிவுரைகள் வழங்கப்படுகின்றன

1. சென்னை மற்றும் மதுரை மாநகராட்சிகளில் ஏற்கனவே நடைமுறையில இருந்த முறைப்படி மேயர்கள் மாநகராட்சி மன்றக் கூட்டத்தின்போது கறுப்பு மேலங்கியும், முக்கிய பிரமுகர்களை வரவேற்கும் பொழுது சிவப்பு அங்கியும் அணியலாம். மேலும் ஏற்கனவே சென்னை மற்றும் மதுரை மாநகராட்சிகளிலுள்ள தங்கச் சங்கிலிகள் மற்றும் செங்கோல்களை இவ்விரு மாநகராட்சி மேயர்களும் பயன்படுத்தலாம். மற்ற கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம் மாநகராட்சி மேயர்கள் மாநகராட்சிக்கோ, அரசுக்கோ இது குறித்து எவ்வித செலவினமும் இல்லாமல் இது போன்ற வழக்கத்தை நடைமுறைப்படுத்தலாம்.

2. எல்லா மாநகராட்சிகளிலும் மேயருக்கும், துணை மேயருக்கும், தனித்தனியாக ஒரு காரும் ஒரு ஓட்டுநரும், மற்றும் பெட்ரோல் மற்றும் டீசல் மாநகராட்சி செலவில் வழங்கலாம். மேயருக்கு வழங்கப்படும் காரில் மட்டும் சிவப்பு சுழல் விளக்கு வைக்க அனுமதிக்கலாம்.

3. எல்லா மாநகராட்சிகளிலும் மேயர் மற்றும் துணை மேயர்களுக்கு வாடகை இல்லாமல் மாநகராட்சிகளிலிருந்து இவர்களது பதவிக் காலத்திற்கு வீடுகள் வழங்கலாம். மேயர் மற்றும் துணை மேயர் ஆகியோர் இல்லங்களில் அலுவலகப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதால் அவர்கள் இல்லங்களில் தேவைப்படும் தளவாடச் சாமான்களை மாநகராட்சிகளிலிருந்து வழங்கலாம். மேலும் இவர்கள் அலுவலகங்களிலும் இல்லங்களிலும் நேரடியாகத் தொலைபேசி இணைப்புகள் வழங்கி மாநகராட்சி நிதியிலிருந்து இதற்கான செலவுகள் ஏற்றுக் கொள்ளலாம்.

4. மேயர் மற்றும் துணை மேயருக்கு எல்லா மாநகராட்சிகளிலும் கீழ்க்கண்டவாறு தனிப்பணியாளர்கள் மாநகராட்சிப் பணியாளர்களிலிருந்து நியமிக்கலாம்.

| | மேயர் | துணை மேயர் |
|---|---|---|
| அ | உதவியாளர் அந்தஸ்தில் ஒருவர் | இளநிலை உதவியாளர் அந்தஸ்தில் ஒருவர் |
| ஆ | அலுவலகத்திற்கு இரண்டு அடிப்படை ஊழியர்களும் இல்லத்திற்கு ஒரு ஊழியரும். | அலுவலகத்திற்கு மட்டும் ஒரு உதவியாளர் |

5. மேயர் மற்றும் துணை மேயர்களுக்கு மாநகராட்சி செலவில் கார்கள் ஒதுக்கீடு செய்யப்படுவதால் இவர்களுக்கு பயணப்படி எதுவும் அளிககப்படவில்லை. எனினும் அலுவல ரீதியாக வெளியூர் சென்றால் முதல்நிலை அலுவலர்க்குரிய பயணச்சலுகை அளிக்கலாம்.

6. எல்லா மாநகராட்சிகளிலும் மேயர் மற்றும் துணை மேயர்களை மாண்புமிகு மேயர் அல்லது மாண்புமிகு மன்றத்தலைவர் / மன்றத் தலைவி மற்றும் மாண்புமிகு துணை மேயர் / துணைத் தலைவர் / துணைத் தலைவி என்றும் அழைக்கலாம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். மாலதி.
அரசு செயலாளர்

பெறுநர்

ஆணையர், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம் மாநகராட்சிகள்
மாவட்ட ஆட்சித்தலைவர், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம்
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை, சென்னை 108
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1 முதல் 4வரை)துறை சென்னை 9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்